உ

ஸ்ரீ சந்த்ரமௌளீச்வராய நம:

# வேத தர்மசாஸ்த்ர பரிபாலன ஸபை,

(Regd.)

கும்பகோணம்

=========

ப்ரசுரம் 34

(விலை அணா ஒன்று)

# உபநயனம்

உத்தராயணம் பிறந்துவிட்டது. மாக மாதம் முதல் ஐந்து மாதங்கள் வஸந்த மாதங்கள். உபநயனம் ஆகாத குழைந்தைகளுக்கு எல்லாம் உபநயனம் செய்துவிடுங்கள். ஒவ்வொரு ஊரிலும் நாலுபேர் ஆஸ்திகர்கள் சேர்ந்து அவ்வூரில் ஏழு வயதுக்கு மேற்பட்டவர்கள் உபநயனம் ஆகாமல் இன்னும் எவ்வளவு பேர் இருக்கிறார்கள் என்று கணக்கு எடுக்கவேண்டும். கணக்கு எடுத்து அவர்கள் எல்லோருக்கும் இவ்வருஷத்தில் பாக்கி இல்லாமல் உபநயனம் ஆகும்படி செய்துவிடவேண்டும். அதற்கு என்ன என்ன வழியோ அவைகளை அங்கங்கு, அந்தந்த ஆஸ்திகர்களோடு ஆலோசித்து எப்படியாவது கார்யத்தைப் பூர்த்தி செய்யவேண்டும். அடுத்த வருஷம் ஏழு வயதிற்கு மேற்பட்ட குழைந்தைகள் உபநயனம் ஆகாமல் இருக்கக்கூடாது. ஹ்ருதயத்தில் காமம் ப்ரவேசிப்பதற்கு முன்னாலேயே காயத்ரி ப்ரவேசித்தால்தான் அந்த சரீரத்தில் ப்ரும்ம தேஜஸ் விளங்கும். ப்ரும்மதேஜஸ் இருந்தாலதான் உலகத்தில் உள்ள எல்லா மக்களுக்கும் உண்மையான உபகாரம் செய்யமுடியும். ஆகையால் அடுத்த வருஷத்தில் ஏழுவயதுக்கு மேற்பட்ட எந்த பையனும் உபநயனம் ஆகாமல் இராமல் இவ்வருஷமே ஜாக்கிரதையாக பார்த்துக்கொள்வது முதற்கடமை ஆகும். அவ்விதம் ஏற்பாடு செய்வதில் தனித்தனியான உவநயனங்களோ அல்லது கூட்டம் கூட்டமான தர்மோபநயனங்களோ நடப்பதற்கு நாலுநாள் முன்னதாகவே ஒரு தர்மக்ஞ வித்வானையோ அல்லது கிருஹ்யக்ஞ வித்வானையோ வரவழைத்து உபநயன மந்த்ரங்களின் அர்த்தத்தை விபரமாக சொல்லிவைத்து அவ்வார்த்தை உபநயன குழைந்தைகளுக்கும் பெற்றோர்களுக்கும் கேட்கும்படி செய்வது நிரம்பவும் அவசியமாகும். தர்மக்ஞ, கிருஹ்யக்ஞ வித்வான்களுக்கு ஸம்பாவனை செய்யவேண்டும்.

ஓம் தத்ஸத்

இப்படிக்கு,
வேத தர்மசாஸ்த்ர பரிபாலன ஸபையோம்.